RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 212 | ஆகஸ்டு.7 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழக வேளாண் பட்ஜெட் 2026-27 முக்கிய அம்சங்கள்

சென்னை: ஆக.7-

தமிழக சட்டப்பேரவையில் 2026 -27ம் நிதி ஆண்டுக்கான தவெக அரசின் முதலாவது பட்ஜெட் நேற்று (ஆகஸ்ட் 5ம் தேதி) தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து இன்று (ஆக.6) வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார்.

வேளாண் பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

› நஞ்சில்லா வேளாண் முறைகளை ஊக்குவித்து, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்க நீலகிரி மாவட்டம் ஊட்டியில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும். இதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு

› உழவர் சந்தைகளை புனரமைக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு.

› 50 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு

› ரூ.4 கோடியில் வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை மகத்துவ மையம் அமைக்கப்படும்.

› ‘வான்மகள்’ திட்டம் 100 மகளிர் உட்பட 500 நபர்களுக்கு ட்ரோன் இயக்கப் பயிற்சி உரிமம், 50 பயிற்சி பெற்ற மகளிருக்கு 50 சதவீத மானியத்தில் ட்ரோன்கள் வழங்க ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› நன்னெறி சாகுபடி; நஞ்சற்ற உற்பத்தி; உலகளாவிய ஏற்றுமதியை ஊக்குவிக்க ரூ.8.43 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› குறைந்த நீரில் அதிக மகசூல் உறுதி செய்ய நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டம் செயல்படுத்தப்படும். 2.2 லட்சம் ஏக்கர் நிலம், 95,000 விவசாயிகள் பலனடைவர். இதற்காக ரூ.785 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› மதிப்புக் கூட்டுதலை மேம்படுத்த 4 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், 2 சிறப்பு வணிக வளாகங்கள் கட்டமைப்பு மேம்பாடு மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்த ரூ.4.80 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ரூ.5.20 கோடி செலவில் தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்படும்.

› திருக்கோவிலூர், முசிறி, காரைக்குடி, தாராபுரம், கும்பகோணத்தில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் ரூ.4.6 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› இவாடகை 2.0 செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்து 463 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய ரூ.20.31 கோடி ஒதுக்கீடு

› 100 விவசாயிகளுக்கு 50% மானியத்தில் கதிரடிக்கும் களங்கள் அமைக்க ரூ.2.8 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ரூ.41 கோடியில் தென்னை சிறப்பு திட்டம், தென்னை டானிக் பூச்சி நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துதல், கரூர் மாவட்டத்தில் தென்னை நாற்றுப் பண்ணை, தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம், கொப்பரைக்கு விலை ஆதரவுத் திட்டம் அரசு செயல்படுத்தவுள்ளது.

› தென்னை சார்ந்த பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்ய ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம் (TNCPC) அமைக்கப்படவுள்ளது.

› கடலோர மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக நன்னீர் கிணறுகள் அமைத்து மிளகாய் மற்றும் கொத்தமல்லி சாகுபடிக்கு டூ.49.4 லட்சம் ஒதுக்கீடு.

› பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான 50 ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் ரூ.8.13 கோடி செலவில் அமைக்கப்படும்.

› 1000 விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியம் 80%மானியத்தில் மின்கட்டமைப்புடன் சாராத சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க ரூ.23 கோடி ஒதுக்கீடு.

› மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து மற்றும் தென்னை ஆகியவற்றில் 100% மானியத்தில் 225 ஏக்கர் பரப்பளவில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமயமாக்குதலுக்கான செயல்விளக்கங்கள் அளிக்க ரூ.46.37



லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› வேளாண் இயந்திரங்களைப் பழுது நீக்கி பராமரிக்கும் 15 மையங்கள் அமைத்திட 50% மானியம். இதற்காக ரூ.1.12 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கிராம அளவிலான 50 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் 80% மானியத்தில் அமைக்கப்படும். இதில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 30% ஒதுக்கீடு வழங்கப்படும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 100% மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல் மற்றும் 75%மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளை தூர் வாருதல் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.8.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் களப்பயிற்சிக்காக 6 புதிய பேருந்துகள் வாங்க ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› தஞ்சை மாவட்டம், சாக்கோட்டையில், 'நம்மாழ்வார்' " பெயரில் ஒரு புதிய உயிர்ம வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரி ரூ.5 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

› ஆயிரம் ஏக்கர் பாசனம் பரப்பை உருவாக்கிட பொதுப்பிரிவைச் சார்ந்த 500 விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் பின்னேற்பு மானியத்தில் அமைத்தல் ஆகியனவற்றிற்கு அதிகபட்ச மானியம் 60% வழங்கப்படும். இதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

› வேளாண் விளைப்பொருட்களுக்கு 100 சதவீதம் பயிர்க்காப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

› வேளாண் கண்காட்சி தொழில்நுட்பமும் பாரம்பரியமும் சங்கமிக்கும் திருவிழா ரூ.3 கோடி செலவில் நடத்தப்படும்.

› உயிர்ம உரப் பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4000 சிறப்பு ஊக்கதொகை வழங்கப்படும்.

› மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் விருது வழங்கப்படும். வெற்றியாளர்களுக்கு முதல் பரிசு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.ஒரு லட்சத்து 50 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.ஒரு லட்சம் வழங்கப்படும்.

தகுதிகள்: சிறு, குறு விவசாயிகள் கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் நிலக்கடலை குறைந்தது 2 ஏக்கரில் சாகுபடி. தினை, சாமை, குதிரைவாலி மற்றும் எள் குறைந்தது 1 ஏக்கரில் சாகுபடி. செய்திருக்க வேண்டும்.

› மாவட்ட அளவில் ‘வெற்றி விவசாயி விருது’ வழங்கப்படும். முதல் பரிசு ரூ.50 ஆயிரம், இரண்டாம் பரிசு 25 ஆயிரம், தகுதிகள் : நெல் (இறவை - மானாவாரி) சோளம், கம்பு, மக்காசோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி குறைந்தது 2 ஏக்கர் சாகுபடி. செய்திருக்க வேண்டும்.

› 5 விவசாயிகளுக்கு சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது வழங்கப்படும். பரிசுத்தொகை ரூ.11லட்சம்

› விவசாயிகளின் அனைத்து தேவைகளுக்கும் 8 புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.27.82 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› வளமான மண்; வளமான வருங்காலம் என்பதால், மண்ணின் வளத்தை பாதுகாக்க ‘தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்’ ரூ. 122.51 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.3.56 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› விதை சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்க 3 புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ரூ.7.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 17,315 ஏக்கருக்கு விதைக்கரும்பு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.9.36 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க ரூ.9 கோடி மதிப்பீட்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

› ரூ.2 கோடி மதிப்பீட்டில் பனை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்படும். இதன் மூலம் பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பயிற்சி அளித்தல் மற்றும் பனைபொருள் உற்பத்திக் கூடாரங்கள் செயல்படுத்தப்படும்.

› ‘வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம்' மாடித் தோட்டம் அமைக்க இடுபொருள் தொகுப்புகள், காய்கறி விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள், நீரியல் தோட்டம், செங்குத்துத் தோட்டம், நிழல்வலைக் குடில்கள் வழங்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

› தரமான விதை! வளமான விவசாயம் என்ற அடிப்படையில், நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான மாநில அரசின் சிறப்புத் திட்டம் ரூ 34.72 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

› AI உழவர் செயலி ஒவ்வொரு உழவருக்கும் தனிப்பயன் சேவைகள் வழங்க கிமி அடிப்படையிலான உழவர் செயலி உருவாக்கப்பட்டு ஸ்மார்ட் வேளாண்மை குறிப்புகள் வழங்கப்படும்.

› பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம் ரூ.203.64 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்க ‘தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்’ ரூ..63.81 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› 1 கோடி விவசாயிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் மண் வள அட்டைகள் வழங்கப்படும்.

› சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற பயிர்களின் சாகுபடியை இருமடங்காக அதிகரிக்க ‘தமிழ்நாடு குறுதானிய இயக்கம்’ரூ.7.61 கோடி மதிப்பீட்டில் இயங்கும்.

› அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை (Quinoa), பாப்பரை (Buck Wheat) குலசாமை (Brown Top Millet) ஆகிய பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

› ரூ.27.21 கோடி மதிப்பீட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்கிட ‘பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்’ உருவாக்கப்படும்.

› ரூ.36 கோடி செலவில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

› விவசாய நிலங்களில் நிரந்தரப் பசுமைக்கு வேளாண் காடுகள் திட்டம் ரூ.17.70 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

› காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் இழப்புகளைத் தடுக்க காட்டுப்பன்றி சேதத் தடுப்புத் திட்டம் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம் ரூ.56.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள், உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் 20 % கூடுதல் மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மின்மோட்டார், சூரிய சக்தி பம்புசெட்டுகள், 300 ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும்.

› மழை, வெயிலிலிருந்து விளைபொருட்களைப் பாதுகாக்க 43,500 தார்ப்பாய்கள் வாங்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› எல் நினோ தாக்கத்தால் 12 மாவட்டங்களில் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் பட்ஜெட்டுக்கு: ‘0’ மதிப்பெண்தான் கொடுக்க முடியும் : எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஆக.07-

நேற்று சட்டமன்றத்தில் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த பட்ஜெட் விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்திருக்கிறது என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக செய்தியாளர் சந்திப்பின்போது, ``தவெக ஆட்சி அமைந்த பிறகு, இரண்டாவது நாளில் முதன்முதலாக வேளாண் பட்ஜெட்டைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்போடு இருந்தார்கள். ஆனால், அவர்களுக்குப் மிகப்பெரிய ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

கடந்த காலத்தில் திமுக ஆட்சியில், 20 துறைகளை ஒன்றாக இணைத்து "வேளாண் பட்ஜெட்" என்று அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றத்தில் சமர்ப்பித்தார்கள்.

அதேபோல்தான், இன்றைக்குப் புதிதாக அமைந்துள்ள அரசும் தமிழக விவசாயிகளை ஏமாற்றும் விதமாக வேளாண் பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளது. சுமார் இரண்டரை மணி நேரம் இந்த பட்ஜெட்டை வாசித்தார்கள். ஆனால், அதில் விவசாயிகளுக்குப் பயனளிக்கக்கூடிய முக்கியமான புதிய திட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ஏற்கெனவே ஒவ்வோர் ஆண்டும் வேளாண் மானியக் கோரிக்கையின் போது என்ன அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றவோ, அதே அறிவிப்புகள்தான் இந்த பட்ஜெட்டிலும் இடம் பெற்றுள்ளன. இன்றைய அரசும் அதே பழைய அறிவிப்புகளுக்குப் புதிய "ஸ்டிக்கர்" ஒட்டிச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. இதில் புதிதாக எதுவுமே இல்லை.

தேர்தல் நேரத்தில் தவெக ஆட்சிக்கு வந்தால், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,500 வழங்கப்படும் என்றும், ஒரு டன் கரும்புக்குக் குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.4,500 வழங்கப்படும் என்றும் அக்கட்சியின் தலைவர் ஜோசப் விஜய் அறிவித்தார். ஆனால், இன்றைய வேளாண் பட்ஜெட்டில் அந்த அறிவிப்பு இடம்பெறவில்லை.

சொந்தமாக விவசாய நிலம் வைத்துள்ள ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் விதைக் காலச் செலவுகளைச் சமாளிக்க ஆண்டிற்கு ரூ.15,000 வீதம் இரண்டு தவணைகளில் (ஜூலை-ஆகஸ்ட் மற்றும் ஜனவரி-பிப்ரவரி) வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தார்கள். அந்த அறிவிப்பும் இதில் இடம்பெறவில்லை.

குத்தகை விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு "உழவர் உரிமை அட்டை" வழங்கி, ஆண்டிற்கு ரூ.10,000 உதவித்தொகை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார்களே தவிர, பட்ஜெட்டில் அதைச் செயல்படுத்தவில்லை.

தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ளவர்களுக்குப் பாதி கடன் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள்.

ஆனால், சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு முதலமைச்சர் அவர்கள், 5 ஏக்கருக்குக் குறைவான நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.75,000 கடனும், ஏனைய விவசாயிகளுக்கு ரூ.35,000 கடனும் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்து விவசாயிகளை ஏமாற்றியுள்ளனர்.

தேர்தல் நேரத்தில் இனிக்க இனிக்கப் பேசி விவசாயிகளை ஏமாற்றிவிட்டு, இந்த வேளாண் பட்ஜெட்டில் எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இது விவசாயிகளை ஏமாற்றுகின்ற ஒரு நாடக பட்ஜெட்.

விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரும்போது, உடனுக்குடன் கொள்முதல் செய்யாததால் மழையில் நனைந்து நெல்மணிகள் முளைத்து வீணாகின்றன. பாதுகாப்பிற்குத் தேவையான தார்பாய்கள் கூட வழங்கப்படுவதில்லை.

தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கடுமையான வறட்சியும் குடிநீர் தட்டுப்பாடும் நிலவுகிறது. கர்நாடகாவில் உள்ள அணைகள் நிரம்பி உபரி நீரை மட்டுமே திறந்து விடுகிறார்களே தவிர, நமக்கு மாதாந்திர வாரியாக வர வேண்டிய உரிய பங்கீட்டு நீரைப் பெற இந்த அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

தமிழக முதலமைச்சர் உரிமைக்காகக் குரல் கொடுக்காமல் மௌனம் காப்பதுடன், கர்நாடகா செல்ல முயலும் போது அம்மாநில முதலமைச்சரால் நிராகரிக்கப்பட்டு தமிழகத்திற்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளார்.

2 மணி நேரம் 35 நிமிடங்கள் வேளாண் பட்ஜெட்டை வாசித்ததுதான் இந்த அரசின் சாதனையே தவிர, விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பயனும் இல்லை. நேற்றைய பொது பட்ஜெட்டிற்கு 'பூஜ்ஜியம்' மதிப்பெண் கொடுத்தேன்; இந்த வேளாண் பட்ஜெட்டிற்கு 'மைனஸ் பூஜ்ஜியம்' தான் கொடுக்க முடியும்." என்றார்.

## “தமிழக வேளாண் பட்ஜெட் திமுக திட்டங்கள் மீது ஒட்டப்பட்ட ‘வெற்றி’ லேபிள்”






சென்னை: ஆக.7-

“திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மேல் 'வெற்றி' என்ற லேபிளை ஒட்டினால் வேலை முடிந்தது என்று தவெக அரசு நினைக்கிறதா?” என திமுக தலைவர் ஸ்டாலின் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள தனது எக்ஸ் தளப் பதிவில், வறட்சி பற்றி பேசாமல், புகழ்ச்சி பாடி முதல்வரின் உச்சிகுளிர பாராட்டுமழை பொழியப் பயன்பட்டதுதான் தமிழக வேளாண் பட்ஜெட். மற்றுமொரு பெயர்மாற்ற நிகழ்வாக மட்டுமே நடந்து முடிந்துள்ளது.

திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மேல் 'வெற்றி' என்ற லேபிளை ஒட்டினால் வேலை முடிந்தது என்று இந்த அரசு நினைக்கிறதா? குறுவை சாகுபடி பாதித்து அரசின் உதவிக்கரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் டெல்டா விவசாயிகளுக்கு எதுவுமில்லாத, வெற்று பட்ஜெட்டாக இந்த வேளாண் பட்ஜெட் அமைந்திருக்கிறது.

விவசாய பெருமக்களின் கோரிக்கைகளை உரத்த குரலில் இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் கழக உறுப்பினர்கள் எழுப்புவார்கள். உறக்கத்தில் இருக்கும் அரசு விழித்துக் கொண்டு பதில் சொல்லியாக வேண்டும். தீர்வு கிடைக்க வேண்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

# தோட்டக்கலைத்துறை மூலம் நிரந்தர பந்தல் அமைக்க 50 சதவீதம் மானியம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

நீலகிரி, ஆக.7-

நீலகிரி மாவட்டம் தோட்டக்கலை துறை மூலம் நிரந்தர பந்தல் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுவதால் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் கூறியதாவது: நடப்பு ஆண்டில் தோட்டக்கலை துறை மூலம் பிரதம மந்திரியின் ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் போஜனா திட்டத்தின் கீழ் மேரக்காய் சாகுபடிக்கு நிரந்தர பந்தல் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 1 எக்டர் பரப்பளவில் நிரந்தர பந்தல் அமைக்கும் சிறு குறு விசாயிகளுக்கு ரூ.3.00 இலட்சம் ரூபாய் பின்னேற்பு மானியாக வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 எக்டர் வரை மானியம் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் தக்க ஆவணங்களுடன் குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிதிட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு





நீலகிரி, ஆக.7-

நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் கேத்தி பேரூராட்சி அலுவலகத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் குறித்தும் மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், சாலைவசதி, மின்சாரம் உள்ளிட்டவை எவ்வித தங்குதடையுமின்றி கிடைத்திட வேண்டுமெனவும், மேலும் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளையும் விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட எல்லநள்ளி பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.9.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையுடன் கூடிய மயான கூரை பணியினையும், சோரகுண்டு பகுதியில் ரூ.8.00 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட தடுப்புச்சுவருடன் கூடிய நடைபாதையினையும் மற்றும் கேத்தி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக அமைக்கப்பட்டுள்ள கேத்தி வளமீட்பு பூங்காவினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்து, அப்பகுதியில் மரக்கன்றுகளை நடவு செய்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர், உதகை ஊராட்சி ஒன்றியம் தொட்டபெட்டா ஊராட்சிக்குட்பட்ட ஆடாசோலை துணை சுகாதார நிலையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருந்துகளின் இருப்பு குறித்தும், ஆடாசோலை நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, பள்ளியின் சமையற்கூடம், பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்தும், தொட்டபெட்டா ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், ஆடாசோலை அங்கன்வாடி மைய குழந்தைகளின் எடை, உயரம் குறித்தும், ஆடாசோலை கிளை நூலகத்தில் பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் வாசகர்களின் எண்ணிக்கை குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.புவனேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், சந்திரசேகரன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# கம்பம் அரசு மருத்துவமனையில் அராஜகம்நோயாளிக்கு கானாவிலக்கு செல்ல ஆம்புலன்ஸ் கொடுக்க மறுத்து தரையில் அமர வைத்த கொடூரம்

## தமுமுகவின் ஆம்புலன்ஸ் மூலம் நோயாளிகள் காணா விலக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்



தேனி, ஆக.7-

கம்பம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளை மருத்துவர்கள் ஊழியர்கள் மிகுந்த அலட்சியமாக கையாண்டு வருகிறார்கள். கடந்த ஆகஸ்ட் 5ம்தேதி காலை மிகுந்த தாங்க முடியாத தலைவலி உடன் மயக்கம் போடும் நிலைக்கு சென்ற நோயாளி ஒருவரை ஊசி மட்டும் போட்டு ஸ்கேன் பண்ண வேண்டும் என கூறி காணாவில்க்கு போக மருத்துவர் கூறி உள்ளார் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து தாருங்கள் என நோயாளி கேட்ட பிறகும் ஆப்பு வர தாமதமாகும் உங்களுக்கு வேண்டும் என்றால் தனியார் ஆம்புலன்ஸில் போங்க என மிக அலட்சியமாக பதில் சொல்லி உள்ளார். வலி தாங்காமல் இருந்தவரை தரையில் அமர வைத்து இருந்தனர்.

இந்த தகவல் அடுத்து இந்திய தவ்ஹீத் ஜமாஅத் மாநில செயலாளர் யாசர் அராபத் மற்றும் நகர செயலாளர் சாகுல் மற்றும் நிர்வாகிகள் அரசு மருத்துவ மனைக்கு சென்று பார்த்த போது மருத்துவர் மற்றும் ஊழியர்கள் அலட்சியமாக பதில் கூறினார்கள். நோயாளி வலி தாங்க முடியாமல் இருந்ததை அடுத்து தமுமுகவின் ஆம்புலன்ஸ் மூலம் நோயாளி காணா விலக்கு மருத்துவ மனை அனுப்பி வைக்க பட்டார். தொடர்ந்து கம்பம் அரசு மருத்துவ மனையில் நோயாளிகள் அலைக்கழிப்பு செய்யப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது.*இந்த அவல நிலையை கண்டித்து விரைவில் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும்.என இந்திய தவ்ஹீத் ஜமாஅத் மாநில செயலாளர் யாசர் அராபத் தெரிவித்தார்.





# திருவள்ளூரில் அரசுமருத்துவகல்லூரி மற்றும் மருத்துமனைகுழந்தைகள் நலத்துறை சார்பில் பாலூட்டும் தாய்மார்கள் வார விழா

திருவள்ளூர், ஆக.7-

திருவள்ளூர் மாவட்டம் ஜே.என். சாலையில் உள்ள அரசுமருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் குழந்தைகள் நலத்துறை சார்பில் உலக தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் வார விழாவையொட்டி நிலையான வாழ்க்கைக்கு தாய்ப்பாலே தொடக்கம் வலுப்படுத்துவோம் அதன் வழிமுறைகளை என்ற கருபொருளை வலியுறுத்தும் விதமாக மாவட்ட ஆட்சி தலைவர் சு.கவிதா IAS தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகப்பேறு அடைந்த தாய்மார்களுக்குநினைவு பரிசுள் வழங்கி கௌரவித்தனர் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் அரசுமருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. மோகன்காந்தி மருத்துவ கண்காணிப்பாளர் மரு.சுரேஷ்பாபு நிலைய மருத்துவ அலுவலர் மரு.ராஜேஷ்குமார் மருத்துவ கல்லூரி துணை மருத்துவர் (பொ) அனிதா குழந்தைகள் நலபிரிவு தலைவர் பேராசிரியர் மரு.ஸ்ரீதேவி மருத்துவ துறைசார்ந்த அலுவலர் மரு.ஸ்ரீதேவி தனியார் தொண்டு நிறுவன மண்டல செயலாளர் கே.பழனி செவிலியர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஆக.7-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி மாதந்தோறும் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் குன்னூர் வட்டாரத்தில் வருகின்ற 12.08.2026 அன்று காலை 11.00 மணியளவில் தோட்டக்கலை உதவி இயக்குநர், சிம்பூங்கா குன்னூர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வேளாண் வணிகம், தோட்டக்கலை, நீலகிரி விற்பனைக்குழு, வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு, ஆவின், தேயிலை வாரியம், இன்ட்கோசர்வ் ஆகிய துறைகள் வட்டார அளவிலான அலுவலர்கள் கலந்து கொள்வதால் விவசாயிகள் விவசாய சம்மந்தமான குறைகள் இருப்பின் இக்கூட்டத்தில் தெரிவிக்கலாம்.

எனவே குன்னூர் வட்டார விவசாயிகள் அனைவரும் சார்ந்த இக்கூட்டத்தில் கலந்து கொண்டு வேளாண்மை கோரிக்கைகளை நேரடியாக மனு கொடுத்து பயன் பெறுமாறு குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர், குன்னூர் கேட்டுக்கொள்கிறார்



# மோரை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் ஆடிகிருத்திகை விழா

மாதவரம், ஆக.7-

மாதவரம் தொகுதி மோரை ஊராட்சி வீராபுரம் பகுதியில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற அருள்மிகு ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் 56ம் ஆண்டு ஆடிமாத கிருத்திகை திருவிழா ஆலய நிர் வாகிகள் ஆதிகேசவலு, ரெஜினா அவினா கிருஷ்ணன்,

முன்னாள் மோரை ஊராட்சி மன்ற தலைவர் திவாகரன், பெருமாள், கீதாகிரிபாபு, பாலசுப்ரமணியன், ராஜன் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கைலாய வாத்தியம்,தாரத் தப்பட்டை முழங்க கணபதி பூஜை, கோபூஜையுடன் சுவாமிக்கு பால் அபிஷேகம் மற்றும் கலச அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இத்திருவி ழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.இதனைத்தொடர்ந்து ஸ்ரீசுப்பிரமணியசுவாமிஸ்ரீ வள்ளி தேவசேனா உற்சவர்கள் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதாளம் வழங்கினர்.



# செங்குன்றத்தில் ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

மாதவரம், ஆக.7-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே எம்.மனோபாலா நினைவு தினத்தை முன்னிட்டு மனோ பாலா கல்வி அறக்கட்டளை சார்பில் சுமார் 500 மேற்பட்ட ஏழை எளியமக்களுக்கு பாய் மற்றும் அறுசுவை அன்னதானம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தவெக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு ஆலோசனையின் பேரில் மனோபாலா கல்வி அறக்கட்டளை நிறுவனரும் மற்றும் தமிழக வெற்றி கழக உறுப்பினருமான லயன் இரா.முனுசாமி ஏற்பாட்டில் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில்தமிழக வெற்றிக் கழகம் செங்குன்றம் நகர செயலாளர் விஜி மற்றும் நிர்வாகிகள் சுரேஷ், அன்பு உள்ளம் ஜீலான், ரிஸ்வான், ஷாகுல், பைரவா வினோத், வில்லியம் ஜோசப், சந்தோஷ், ஆசைத்தம்பி, என்.எஸ். உதயா, பிரபு உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர். முடிவில் தொண்டர் அணி மருத்துவர் எம்.சாய்பாலா அனைவருக்கும் நன்றி கூறினார்



# தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சாலையோர உணவகங்கள் மற்றும் இரவுநேர உணவகங்களை கட்டுப்படுத்த வேண்டும்

போடிநாயக்கனூர், ஆக.7-

தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சாலையோர உணவகங்கள் மற்றும் இரவுநேர உணவகங்கள் பெருகி வருவதாகவும், இவற்றில் சுகாதாரமற்ற நிலையில் செயல்படும் உணவகங்களை கட்டுப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில் போடிநாயக்கனூர், சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் செயல்படும் இரவு நேர உணவகங்களில் 03.08.2026 அன்று உணவு பாதுகாப்பு அலுவலர்களால் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், சாலையோர மற்றும் இரவுநேர உணவகங்கள் என மொத்தம் 33 கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது செயற்கை நிறமி சேர்க்கப்பட்ட உணவு பொருட்கள், காலாவதியான உணவுப்பொருட்கள் மற்றும் கெட்டுப்போன நிலையிலிருந்த இறைச்சி மற்றும் மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. மேலும், உணவுப் பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006 பிரிவு 55ன் கீழ் 4 கடைகளுக்கு மேம்படுத்துதல் அறிவிப்பாணை வழங்கப்பட்டு அபாரதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், உணவு எண்ணெய்யை ஒருமுறை மட்டும் பயன்படுத்திட வேண்டும் எனவும், மீதான எண்ணெய்யை அரசால் அங்கீகரிக்கப்பட்ட RUCO நிறுவனத்திற்கு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டதுசாலையோர மற்றும் இரவுநேர உணவகங்கள் நடத்தும் உணவு வணிகர்களுக்கு பொதுமக்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான உணவு வழங்கிடும் பொருட்டு 29.07.2026 அன்று உணவுப் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் முகாம் நடத்தப்பட்டது. மாவட்டம் முழுவதும் செயல்படும் சாலையோர மற்றும் இரவு நேர உணவகங்கள் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது என உணவுப்பாதுகாப்பு அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பழனி கோயில், ரயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் கைது செய்யப்பட்டார்

பழனி, ஆக.7-

பழனி கோயில், ரயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அவசர எண் 100 மூலம் மர்ம நபர் ஒருவர் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் விடுவித்துள்ளார். இதையடுத்து போலீசார் அனைத்து பகுதிகளும் தீவிர சோதனை மேற்கொண்டு மிரட்டல் வந்தால் என்னை தொடர்பு கொள்ள முயற்சித்துள்ளனர். சம்பந்தப்பட்ட நபர் திண்டுக்கல் பகுதியில் இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து பழனி அடிவாரம் போலீசார் ஆய்வாளர் கவிதா தலைமையில் ரயில் நிலையம் பகுதியில் சுற்றிய நபரை சுற்றி வளைத்து கைது செய்தனர். விசாரணையில் அவர் தர்மபுரி மாவட்டம் நல்லாம்பள்ளியை சேர்ந்த மதுமகன் முனியப்பன்(27) என்பது தெரிய வந்துள்ளது. அவர் எதற்காக கொலை மிரட்டல் விடுவித்தார் என விசாரணை நடைபெற்று வருகிறது.



# பழனி கோயில் நில மோசடி: சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது

திண்டுக்கல், ஆக.7-

பழனி கோயில் நிலத்தை ரூ.2 கோடிக்கு மோசடியாக பதிவு செய்த வழக்கில் ஏற்கனவே 4 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் நில மோசடி விவகாரத்தில் சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்டார். இடைக்கால முன்ஜாமின் ரத்து செய்யப்பட்ட நிலையில் காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# நக்சலைட் தடுப்பு நடவடிக்கையில் உயிரிழந்த காவல்துறையினருக்கு 46வது வீரவணக்க நாள் அனுசரிப்பு

திருப்பத்தூர், ஆக.7-

கடந்த 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் தேதி, நக்சலைட் தீவிரவாதிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அழைத்துச் செல்லும் போது அவர்கள் நடத்திய குண்டுவெடிப்பு தாக்குதலில் காவல் ஆய்வாளர் பழனிச்சாமி, தலைமைக் காவலர் ஆதிகேசவலு மற்றும் காவலர்கள் யேசுதாஸ், முருகேசன் அவர்கள் ஆகியோர் வீரமரணம் அடைந்தனர். அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 6ஆம் தேதி திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் 'வீரவணக்க நாள்' அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 46 வது வீரவணக்க நாள் நிகழ்ச்சி (06.08.2026) அன்று திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், காணொலி வாயிலாக கீ.மி.தேவாரம், IPS, (ஓய்வு பெற்ற காவல்துறை இயக்குநர்) சிறப்புரையாற்றினார். மேலும், K.விஜயகுமார், I.P.S., காவல்துறை இயக்குநர் (ஓய்வு), துக்கையாண்டி,IPS., காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஓய்வு) , J.மகேஷ், I.P.S., காவல்துறை துணைத்தலைவர், வேலூர் சரகம் G.ரவிக்குமார், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் மாவட்டம் அவர்கள், அக்ஷய் அனில் வாகரே, I.P.S., காவல் கண்காணிப்பாளர், திருப்பத்தூர் மாவட்டம் B.K.அரவிந்த், I.P.S., காவல் கண்காணிப்பாளர், Q பிரிவு, சென்னை, M.அசோக்குமார், I.P.S., காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு), தமிழ்நாடு ஆகியோர் வீரமரணம் அடைந்த காவல்துறையினருக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.இந்நிகழ்ச்சியில் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், நீதித்துறை அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், காவல் அதிகாரிகள், காவலர்கள், உயிரிழந்த காவல்துறையினரின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு வீரமரணம் அடைந்த காவல்துறையினருக்கு அஞ்சலி செலுத்தினர்.



# வடுகபட்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

வடுகபட்டி, ஆக.7-

தேனி மாவட்டம், வடுகபட்டி பேரூராட்சியில் பேரூராட்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் , வடுகபட்டி பேரூராட்சியில் ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுவரும் அறிவுசார் மையக் கட்டிடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பணிகளை காலதாமதமின்றி திட்டமிட்ட காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சென்று மாணவ, மாணவிகளுக்கு வழங்கிவந்த மதிய உணவை பார்வையிட்டு, நாள்தோறும் சுகாதாரமான முறையில் உணவு வழங்கிடப் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தி னார்.பின்னர், வடுகபட்டி பேரூராட்சிக்கு வைகை அணையிலிருந்து குடிநீர் வழங்கிட மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை பார்வையிட்டதுடன் 3 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.மேலும், வடுகபட்டியில் உள்ள கவிஞர் கண்ணதாசன் நூலகத்திற்கு சென்று பார்வையிட்டு தினசரி வாசகர்களின் வருகை குறித்து கேட்டறிந்ததுடன், தேவையான அளவு புத்தகங்களை வைத்து பராமரித்திடவும், வாசகர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நல்ல முறையில் பராமரித்திடவும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.இந்த ஆய்வில் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்).வில்லியம் ஜேசுதாஸ், உதவி செயற்பொறியாளர் அம்சா உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பாக, போதைப் பொருட்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் இன்று (06.08.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், உதவி ஆணையர் (ஆயம்) பழனி, இணை இயக்குநர் (நலப்பணிகள்) (பொ) மரு.எழிலரசி, மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.செந்தில்குமார், உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# இளையான்குடியில் 1994 ஆம் ஆண்டு +2 பயின்ற பள்ளி “மாணவிகளின் சங்கமம்



இளையான்குடி, ஆக .7-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில், மேலப்பள்ளிவாசல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 1950ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பள்ளி மேலப் பள்ளிவாசல் ஜமாத் டிரஸ்ட் நிர்வாகத்தால் நடத்தப்படுகிறது.100% ஆசிரியைகளும்,பெண் ஊழியர்கள் மட்டுமே பணிபுரிகின்ற ஒரு மேல்நிலைப்பள்ளியாகும். இப்பள்ளியில், சுற்று வட்டார, கிராமப் பகுதிகளை சேர்ந்த மாணவிகள் பாதுகாப்பாக வந்து கல்வி பயின்று செல்லக்கூடிய பள்ளியாக இருக்கிறது, ஆண்டு முழுவதும் அரசு பொதுத் தேர்வுகளில், மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 100 சதவிகிதமாக தொடர்ந்து இருக்கிறது.உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வந்த இந்தப்பள்ளி 1991ல் தான் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. 800க்கும் மேற்பட்ட மாணவிகள் கலவி கற்று வருகின்றனர்.இந்தப்பள்ளியின் நிர்வாகத்தால் நடத்தப்படும் தொடக்கப் பள்ளியும் இப்பகுதி மாணவிகளுக்கு கல்விப் பணி செய்து வருகிறது.பள்ளியின் வளாகத்தில் "மாணவிகளின் சங்கமம்" என்ற நிகழ்ச்சியை இப்பள்ளியில் 1992 1994ம் ஆண்டு +2 முடித்த மாணவிகள் மிக சிறப்பாக நடத்தினார்கள்.நேற்று ஒன்று கூடிய 40 பழைய மாணவிகளும், மாணவிகளுக்கு கற்று கொடுத்த ஆசிரியைகளும், தலைமையாசிரியையும், ஒருவரை ஒருவர் தமது பழைய நினைவுகளையும், நட்புகளையும், பகிர்ந்து கொண்டு, உணர்வுப்பூர்வமாக உபசரித்து மகிழ்ச்சி அடைந்து ஒருவருக்கொருவர் அன்பையும், இனிப்பையும், பூக்கொத்தையும் கொடுத்து தத்தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி தங்களது நட்பை புதுப்பித்து கொண்டனர். தமக்கு கற்று கொடுத்த ஆசிரியர்களுக்கு மரியாதை செய்தனர்.

மேலும் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், நினைவுகளை அசைபோடுதல், பரிசளித்தல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றது. அனைவருக்கும்மதிய உணவாக கறி பிரியாணியும்பரிமாறப்பட்டது. இப்பள்ளியில் படித்தவர்கள் இப்பள்ளிக்கே ஆசிரியர்களாகவும், காவல் உதவி ஆய்வாளராகவும், காவலராகவும் பணிபுரிகின்றனர்.தாங்கள் படித்த இப்பள்ளிக்கு ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் நிதியில் வகுப்பறைக்கு தேவையான மர இருக்கைகளும், பேச்சாளருக்கான போடியமும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர், காதர்பாட்சா தலைமை தாங்கினார்.ஓய்வு பெற்ற தலைமையாசிரியை சம்சு நிஷா முன்னிலை வகித்தார்,தற்போதைய தலைமையாசிரிசியை சாராஜான் அனைவரையும் வரவேற்றார்.பல ஊர்களில் இருக்கும் முன்னாள் மாணவிகளின்மு கவரிகளை சிரமத்தோடு சேகரித்து, இந்த நிகழ்சிக்கான ஏற்பாடுகளைஜமீன் நிஷா,சபினா, ஜெயினப்,பாத்திமா, ஜெயசீலி, ஜோசபின், ஜெயந்தி, செல்வி, ரூபி வசந்த குமாரி, சாஜிதா,ஆபிதா போன்ற முன்னாள் மாணவிகள் சிறப்பாக செய்திருந்தனர். இந்த பழைய மாணவிகளுக்கு பாடங்கள் கற்பித்த ஒய்வு பெற்ற ஆசிரியர்களான ஹாஜிரா பீவி, மல்லிகா பீவி, நூர்ஜஹான், ருக்குமணி, மீரா, அங்கையர் கண்ணி ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.



# அவதானப்பட்டி மாரியம்மன் கோயிலின் 262ம் ஆண்டு திருவிழா 500க்கும் அதிகமான ஆடுகள், கோழிகளை பலியிட்டு நேர்த்திக்கடன்

கிருஷ்ணகிரி, ஆக.7-

கிருஷ்ணகிரி அடுத்த அவதானப்ட்டி மாரியம்மன் கோயிலின் 262ம் ஆண்டு திருவிழாவினையொட்டி 500க்கும் அதிகமான ஆடுகள், கோழிகள் பலியிட்டு நேர்த்தி கடன் செலுத்தினர். கிருஷ்ணகிரி அடுத்த அவதானப்பட்டியில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மாரியம்மன் கோயிலின் 262ம் ஆண்டு மாரியம்மன் திருவிழா கடந்த மாதம் 17ம் தேதி காலை, கணபதி பூஜை மற்றும் கொடியேற்றத்துடன் துவங்கியது. அன்று முதல் அம்மனுக்கு, அபிஷேகம், ஆராதனை, சிறப்பு அலங்காரம், கூழ் ஊற்றுதல் ஆகியவை நடந்து வந்தது. கடந்த 1ம் தேதி அம்மனுக்கு சந்தனகாப்பு அலங்காரம் நடந்தது. கடந்த 3ம் தேதி காலை அம்மனை கோயிலில் இருந்து தென்பெண்ணை ஆற்றுக்கு கொண்டு சென்று அம்மனை நீராட்டுதல் நடந்தது. 4ம் தேதி, கோலாட்டம், வானவேடிக்கையும், அதிகாலை 4 மணிக்கு, சுவாமி ஊர்வலம் புறப்படுதல் ஆகியவை நடந்தது.நேற்று காலை, மாரியம்மன், பூங்காவனத்து அம்மன், காளியம்மன், சக்தி மாரியம்மன் கரகம் எடுத்து, பம்பை ஆட்டம், சிலம்பாட்டத்துடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மாவிளக்கு எடுத்து ஊர்வலமாக கோயிலுக்கு சென்றனர். இதில், சுவாமிகள் தலைகூடும் நிகழ்ச்சியும், சிவன், பார்வதி, ராதை, ருக்கு, மகாமுனிவர், நாதர் ஆகிய வேடங்களை அணிந்து பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்தினர். கோயிலில், ஏராளமான பக்தர்கள் ஆடு மற்றும் கோழிகளை பலியிட்டு தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர். கோயில் மட்டுமின்றி, தங்கள் வீடுகளிலும் என சுமார் 500க்கு அதிகமான ஆடுகள், கோழிகளை பலியிட்டனர். தொடர்ந்து வருகிற 12ம் தேதி வரை, அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம் நடைபெற உள்ளது.



# கோவில் உண்டியல் திருட்டு கும்பல் மீது நடவடிக்கை

தேனி, ஆக.7-

தேனி மாவட்ட காவல்துறை - விரைவான நடவடிக்கை இரவு ரோந்துப் பணியில் இருந்த காவலரை தாக்கி தப்பிய கோவில் உண்டியல் திருட்டு கும்பல் மீது தென்கரை காவல்துறையினர் அதிவேக நடவடிக்கை மேற்கொண்டனர். காயமடைந்த காவலர் அளித்த முக்கிய தகவலின் அடிப்படையில், பெரியகுளம் உட்கோட்ட காவல்துறையினர் தனிப்படை அமைத்து முக்கிய குற்றவாளியை கைது செய்து, தொடர்புடைய இளஞ் சிறார்களையும் கைப்படுத்தினர். மேலும் விசாரணையில் மேற்படி நபர்கள் கோவில் உண்டியல் திருட்டு குற்றத்தில் ஈடுபட்டதும், அவர்கள் குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு இருசக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளனமேலும்தப்பியோடிய குற்றவாளிகளை கைது செய்ய தீவிர தேடுதல் நடைபெற்று வருகிறது. தமிழக காவல்துறை பொதுமக்களின் பாதுகாப்பையும் சட்டம்ஒழுங்கையும் உறுதியாக நிலைநிறுத்தி, குற்றவாளிகள் மீது விரைவான மற்றும் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

# தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சர்ச்சை உறவினர்கள் முற்றுகை; மருத்துவமனை நிர்வாகம் விளக்கம்



தாம்பரம், ஆக.7-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் சிகிச்சை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நோயாளிக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாக அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டி மருத்துவமனையை முற்றுகை யிட்டனர்இரும்புலியூரைச் சேர்ந்த தங்கராஜ் (48), முடி திருத்தும் கடையில் பணியாற்றி வருகிறார். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அவருக்கு இடது கால் பாதத்தில் ஏற்பட்ட தொற்று காரணமாக முதலில் தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அறுவை சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார். அங்கு காலில் உள்ள கட்டை விரலை மட்டும் அகற்றுவதாக மருத்துவர்கள் தெரிவித்த நிலையில், பின்னர் காலின் மற்ற பகுதிகளிலும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தங்கராஜின் குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். மேலும், போதிய அனுபவமுள்ள மருத்துவர்கள் இல்லாமல் மருத்துவ மாணவர்களை கொண்டு அறுவை சிகிச்சை செய்ததாகவும், மருத்துவர்கள் நேரத்திற்கு வருவதில்லை, நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து தாம்பரம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலரிடம் விளக்கம் கேட்டபோது திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என கூறிய தங்கராஜின் மனைவி ரம்யா, மகள் பூஜா, மகன் அருண் மற்றும் உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டு, தவறு செய்த மருத்துவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நோயாளிக்கு உரிய மேல் சிகிச்சை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இந்த குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளித்த தாம்பரம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை நிர்வாகம், தங்கராஜுக்கு மருத்துவ விதிமுறைகளின்படி உரிய சிகிச்சை வழங்கப்பட்டதாக தெரிவித்தது. அவரது சர்க்கரை அளவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னரே மேல் சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டதாகவும், அங்கு நடைபெற்ற அறுவை சிகிச்சைக்கும் தாம்பரம் அரசு மருத்துவமனைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் விளக்கமளித்தது.மேலும், நோயாளிக்கு பிளாஸ்டிக் சர்ஜரி மேற்கொள்ள மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்த நிலையில், அதனை மேற்கொள்ளாமல் குடும்பத்தினர் புகார் தெரிவித்துள்ளதாகவும் மருத்துவமனை நிர்வாகம் கூறியுள்ளது.நோயாளி குடும்பத்தினரின் குற்றச்சாட்டும், மருத்துவமனை நிர்வாகத்தின் விளக்கமும் வெளியாகியுள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அதிகாரப்பூர்வ விசாரணை நடத்தப்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து 3 நாட்களுக்கு 1,805 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!



சென்னை, ஆக.7-

கிளாம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நாளை முதல் 3 நாட்களுக்கு 1,805 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. வார இறுதி நாட்களை முன்னிட்டுத் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது. வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையை முன்னிட்டு, வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளைக் காட்டிலும் கூடுதலாகச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட இருக்கின்றன.சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி உள்ளிட்ட ஊர்களுக்கு வெள்ளிக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளைக் காட்டிலும் 430 சிறப்புப் பேருந்துகளும், சனிக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளைக் காட்டிலும் 465 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட இருக்கின்றன.

அதேபோல ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை திரும்புவதற்கு ஏதுவாகவும் 410 சிறப்புப் பேருந்துகள் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த வாரம் மட்டும் வெள்ளிக்கிழமை பயணிகள் ஊருக்குச் செல்வதற்காக கிட்டத்தட்ட 8,570 பயணிகள் முன்பதிவு செய்திருக்கிறார்கள். இந்தச் சிறப்புப் பேருந்துகள் இயக்கத்தைக் கண்காணிக்க அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தகவல் தெரிவித்துள்ளது.

# திருப்போரூரில் அடிக்கடி நெரிசல் போக்குவரத்து போலீசாரின்றி திணறும் புறவழிச்சாலை




திருப்போரூர், ஆக.7-

ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள திருப்போரூர் பகுதியில் இள்ளலூர் சந்திப்பில் இருந்து ரவுண்டானா வரை வணிக நிறுவனங்கள் அதிகம் அமைந்துள்ளன. இதில், தொடர் போக்குவரத்து நெரிசல் காரணமாக காலவாக்கத்தில் இருந்து ஆலத்தூர் வரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டது. ஆனால் புதுச்சேரி, கல்பாக்கம் செல்லும் வாகனங்கள் மட்டுமே இந்த புறவழிச்சாலையில் செல்கின்றன. மற்றபடி ஆலத்தூர், பையனூர், செம்பாக்கம், சிறுதாவூர், செங்கல்பட்டு செல்லும் வாகனங்கள் திருப்போரூர் நகரப்பகுதிக்கு உள்ளே வந்து செல்கின்றன. இந்த சாலையில் பள்ளி, கல்லூரி வாகனங்களும், தனியார் நிறுவன ஊழியர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களும் அதிகளவில் காலை மற்றும் மாலை நேரங்களில் வந்து செல்கின்றன.இதுமட்டுமின்றி கட்டுமான பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களும், ஏரி மண்ணை எடுத்துச்செல்லும் கனரக லாரிகளும், தண்ணீர் டேங்கர் லாரிகளும் இந்த சாலையில் செல்கின்றன. இதனால், புறவழிச்சாலை அமைத்தும் பழைய ஓ.எம். ஆர். சாலை எப்போதும் நெரிசலுடன் உள்ளது. திருப்போரூர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப்பிரிவு போலீசார் மட்டுமே உள்ளனர். மாமல்லபுரத்தில் இருந்து போக்குவரத்து காவல் நிலைய போலீசார் மாதம் ஒரு முறை வந்து திடீர் வாகன சோதனையில் ஈடுபடுகின்றனர். இதனால், போக்குவரத்து விதிமீறல் குறித்து வாகன ஓட்டிகளுக்கு எந்த கவலையும் இல்லை.

இதன் காரணமாக காலை மற்றும் மாலை நேரங்களில் 1 கி.மீ. தூரத்தை கடக்க அரை மணி நேரம் செலவாகிறது. இதனால் காலையில் பள்ளி, கல்லூரிக்கு செல்வோரும், வேலைக்கு செல்வோரும் பெரும் நேர விரயத்திற்கு ஆளாகின்றனர். எனவே, திருப்போரூர் காவல் நிலையத்தில் நிரந்தர போக்குவரத்து பிரிவை உருவாக்கி போலீசாரை நியமிக்க வேண்டும் என்றும், கனரக வாகனங்கள் அனைத்தையும் புறவழிச்சாலையில் மட்டுமே செல்ல அறிவுறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

# அட்டப்பாடி மலை உச்சியில் 1,400 கஞ்சா செடிகள் அழிப்பு! கூடாரம் அமைத்து சாகுபடி செய்த கும்பலை போலீசார் தேடி வருகின்றனர்



தமிழ்நாடு, ஆக.7-

கேரள எல்லைப் பகுதியில் உள்ள அட்டப்பாடி மலை உச்சியில் சட்டவிரோதமாக பயிரிடப்பட்டிருந்த சுமார் 1,400 கஞ்சா செடிகளை போலீசார் கண்டறிந்து பிடுங்கி அழித்தனர். தமிழ்நாடு-கேரள எல்லைப் பகுதியில் உள்ள புதூர் அருகேயுள்ள மலை உச்சியில், கூடாரம் அமைத்து தங்கி இருந்த ஒரு கும்பல் கஞ்சா செடிகளை பயிரிட்டு வளர்த்து வந்தது தெரியவந்துள்ளது.கேரள மாநிலத்தில் தற்போது போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக 'ஆபரேஷன் துபா' என்ற பெயரில் ரகசிய போலீசார் பல்வேறு இடங்களில் தீவிர சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், பாலக்காடு மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தமிழ்நாடு-கேரள எல்லைப் பகுதியில் உள்ள அட்டப்பாடி மலை உச்சியில் கஞ்சா தோட்டம் அமைக்கப்பட்டிருப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு விரைந்த போலீசார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு, கஞ்சா தோட்டத்தை கண்டுபிடித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சா செடிகள் அனைத்தும் சுமார் ஐந்து மாதங்கள் வயதுடையவை என தெரியவந்துள்ளது. அவற்றை அறுவடை செய்வதற்காக சம்பந்தப்பட்ட கும்பல் அப்பகுதியிலேயே கூடாரம் அமைத்து தங்கி இருந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது. போலீசார் அனைத்து கஞ்சா செடிகளையும் முழுமையாக பிடுங்கி, அங்கேயே தீ வைத்து எரித்து அழித்தனர்.

மேலும், தமிழ்நாடு-கேரள எல்லைப் பகுதியில் உள்ள மலைத் தொடர்களில் வேறு எங்காவது கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டுள்ளனவா என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனக்கு சொந்தமான நிலத்தில் அனுமதியின்றி சாலை அமைப்பு? - அதிகாரிகள் மீது முதியவர் பரபரப்பு குற்றச்சாட்டு





சிவகங்கை, ஆக.7-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே உள்ள எஸ்.எஸ். நகர் பகுதியில், தனது பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்ட பட்டா நிலத்தில் எந்தவித அரசின் அனுமதியும், சாலை அமைப்பதற்கான அதிகாரப்பூர்வ அங்கீகாரமும் இல்லாத நிலையில், தனிநபர் ஒருவர் கேவர் பிளாக் கற்கள் பதித்து சாலை அமைத்து வருவதாக பாதிக்கப்பட்ட முதியவர் பில்லப்பன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:"எனது பட்டா நிலத்தில் சட்டவிரோதமாக சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுகுறித்து வட்டாட்சியர், காவல்துறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (பி.டி.ஓ.) ஆகியோரிடம் பலமுறை புகார் தெரிவித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றாலும், அழைப்பை ஏற்கவோ, உரிய பதில் அளிக்கவோ இல்லை" என்றார். மேலும், எதிர்தரப்பினர் நீதிமன்ற உத்தரவு இருப்பதாக தெரிவித்தனர். ஆனால் அந்த உத்தரவை ஆய்வு செய்தபோது, ஆக்கிரமிப்பை அகற்றுவது தொடர்பாக மட்டுமே நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தெரியவந்தது. சாலை அமைப்பதற்கு எந்தவித அனுமதியோ அல்லது உத்தரவோ அந்த நீதிமன்ற ஆணையில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேபோல், 2024ஆம் ஆண்டு ஊராட்சி மன்ற அலுவலகம் சார்பில் சாலை அமைப்பது தொடர்பாக வழங்கப்பட்ட ஒரு கடிதத்தை எதிர்தரப்பினர் ஆதாரமாக காட்டியதாகவும், ஆனால் அந்தக் கடிதத்தின் கால அவகாசம் முடிந்துவிட்டதால் தற்போது அது செல்லுபடியாகாது என்றும் பில்லப்பன் கூறினார்.அரசு நிலம் அல்லது பொதுநிலத்தில் கூட தனிநபர்கள் தன்னிச்சையாக சாலை அமைக்க உரிய அனுமதி மற்றும் ஆவணங்கள் அவசியம். ஆனால் எந்தவித சட்டப்பூர்வ ஆவணமும் இன்றி தனது பட்டா நிலத்தில் அத்துமீறி சாலை அமைக்கப்படுவதாக அவர் குற்றம்சாட்டினார்.மேலும், இந்த விவகாரத்தில் வட்டாட்சியர், காவல்துறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்காமல், அத்துமீறலுக்கு துணைபோவதாகவும், பணம் பெற்றுக்கொண்டு இப்பணியை அனுமதிப்பதாகவும் பில்லப்பன் குற்றம் சாட்டினார். எனவே, மாவட்ட நிர்வாகம் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, சாலை அமைக்கும் பணியின் சட்டப்பூர்வ தன்மையை முழுமையாக ஆய்வு செய்து, உண்மை நிலையை வெளிக்கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். குறிப்பு: மேற்கண்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டவர் பில்லப்பன் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் எதிர்தரப்பினரின் விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை.

# கிருஷ்ணகிரியில்கிழக்கு மாவட்ட திமுக அவரச செயற்குழு கூட்டம்



கிருஷ்ணகிரி, ஆக.7-

கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் நடந்தது.கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் பங்கேற்று, தீர்மான விளக்கவுரையாற்றினார். இதில், நகர செயலாளர்கள் அஸ்லாம், வேலுமணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், மகேந்திரன், கே.மகேந்திரன், குமரேசன், குண.வசந்தரசு, ரஜினிசெல்வம், சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, இளைஞராஜா, காந்தி, பேரூர் செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கட்டப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன், வக்கீல் வெங்கடேஷ்ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்கூட்டத்தின் போது, நாளை (7ம் தேதி) கலைஞரின் 8வது நினைவு நாளையொட்டி, அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழகங்களில் காலை 8 மணியளவில் கலைஞரின் திருவுருப்படத்திற்க மாலை அணித்தும், கிழக்கு மாவட்ட திமுக சார்பில், சென்ட்ரல் தியேட்டர் அருகில் இருந்து ஊர்வலமாக ராயக்கோட்டை மேம்பாலம் அருகில் உள்ள கலைஞர் திருவுரு சிலை வரை சென்று, அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது. கழக இளைஞரணி செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலினின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் பொய் வழக்கு பதிவு செய்துள்ள தவெக அரசை வன்மையாக கண்டிப்பது. விவசாயிகள், பொதுமக்களின் அடிப்படை தேவைகள் மீது கவனம் செலுத்தாமல் எதிர்க்கட்சிகள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முனைப்பு காட்டும் தவேக அரசை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக வன்மையாக கண்டிப்பது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனை தலைவிரித்து ஆடுகிறது. இதனை ஆளுகின்ற தவெக அரசு போர்க்கால அடிப்படையில் முன்னுரிமை அளித்து குடிநீர் பிரச்சனையை உடனடியாக தீர்க்க வேண்டுமென இந்த கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்வது. இல்லையெனில் கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மக்கள் தேவையை பூர்த்தி செய்ய மக்களுடன் சேர்ந்து போராடுவது. தமிழகத்தின் வாழ்வாதாரமாக திகழும் காவிரி நீர் பிரச்சனையில் கண்டு கொள்ளாமல் உள்ள தமிழகத்தில் ஆளும் அரசு உறக்கத்திலிருந்து மீண்டு மேட்டூர் அணையை திறப்பதற்காக தமிழகத்திற்கான உரிமையான காவிரியில் தண்ணீர் பெற்று மேட்டூர் அணையை திறந்து டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கு முனைப்புடன் செயல்பட்டு காவிரி தண்ணீர் பெற்று டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என இந்த கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்வதோடு, கர்நாடக மாநில அரசு காவிரியின் குறுக்கே மேகேதாட்டு என்ற இடத்தில் அணைக்கட்ட முற்படுவதை கண்டுகொள்ளாமல் உறக்கத்தில் இருக்கும் தமிழகத்தை ஆளும் அரசை வன்மையாக கண்டிப்பதோடு மேகேதாட்டு அணை கட்டுவதை தடுப்பதற்கு முனைப்புடன் செயல்பட்டு டெல்டா மாவட்ட மக்களை பாதுகாக்க வேண்டும் என இந்த கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்வது. திமுக தலைவர் தளபதியாரின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற புதிய திட்டங்களை அறிவித்து செயலாற்றி வந்த நிலையில் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்குப்பின் தற்போது ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ள இந்த அரசு, திராவிட மாடல் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களை பெயர் மாற்றுவது, திட்டங்களை முடக்குவது, நிதியை குறைப்பது உள்ளிட்ட மக்கள் விரோத செயல்களை வன்மையாக கண்டிப்பதோடு, தமிழகத்தில் உள்ள கடைக்கோடி மக்களும் எந்த வகையிலும் பாதிக்காத வகையில் திராவிட மடல் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களையும் முழுமையாக தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், குறிப்பாக இன்று (நேற்று) அறிவிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கல்விக்கு நிதியை குறைத்துள்ளதை வன்மையாக கண்டிப்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




# அமோனியா வாயு கசிவு வழக்கு : உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக.7-

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேரில் உள்ள இறால் பதப்படுத்தும் ஆலையில் ஜூன் 21ம் தேதி அமோனியா வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது. வாயு கசிவு சம்பவம் தொடர்பாக ஆலை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு நிபந்தனை ஜாமின் அளித்து, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அரசு இழப்பீடு தொகையை நிர்ணயம் செய்தபின் விரிவான உத்தரவு பிறப்பிக்கபடும் என்று உயர்நீதிமன்றம் நீதிபதி குமரப்பன் தெரிவித்துள்ளார்




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161